பக்கங்கள் 04 வாரநோக்கு விலை ரூபா. 2-00

# விழிப்பு

விழி 01 புதன்கிழமை 26 - 02 - 1992 நோக்கு :04

## அரசுக்கெதிரான மக்கள் எழுச்சிகள் தொடர்கிறது!

உணவு முத்திரையில்-உணவுப் பொருள்கள் வழங்கப் படாமல் புள்ளிகள் வெட்டி எடுக்கப்படுவதை எதிர்த்து யாழ். செயலகத்தை நோக்கி 24 - 02 - 92 அன்று ஆர்ப் பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது. அண்மைக்கால மாக சிங்கள அரசின் அனைத்து அழுத்தங்களையும் எதிர்த்து மக்கள் தொடர்ச்சியாக வீதியில் இறங்கி ஆர்ப் பாட்டம் செய்து அரச கொடூரமுகத்தை உலகிற்கு அம் பலப்படுத்தி வருகின்றனர். (4 ஆம் பக்கம் பார்க்க)



# உள்ளூர் உற்பத்தியில் தங்கியிருப்போம்!

பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசா

எமது விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட தனியே இரா ணுவ நடவடிக்கைகளை மட்டும் எதிரி மேற்கொள்ளவில்லை. 90 யூன் போரைத் தொடர்ந்து கடுமையான பொருளாதாரத் தடை அமுலாக்கப்பட்டது. ஆனாலும் நீண்ட ஒன்றரை ஆண்டிற்கும் மேற்பட்ட கால பொருளாதாரத் தடையால் எமது மக்களின் போராட்ட உறுதியை தகர்த்து விட முடியவில்லை.

சுய உற்பத்தியின் தேவை முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு உணரப்பட்டது இக்கால கட்டத்திலேயே ஆகும். புதிய தொழில் நுட்பம் முளைவிடத் தொடங்கியது தீவிரமான பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து பெருமளவு மக்கள் தொழில் வாய்ப்பிழந்து இருந்தார்கள். இவர்களில் பெரும் பான்மையானோர் தேசத்தின் தேவை ஈடு செய்வதற்காகப் புதிய புதிய உள்ளூர் உற்பத்தித் துறைகளின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புப் பெற்றார்கள்.

சுருக்கமாகக் கூறினால் எவ்வளவுக் கெவ்வளவு பொருளாதாரத் தடையைச் சிறிலங்கா தீவிரமாக்கியதோ அவ்வளவுக் கவ்வளவு இங்கு சுய உற்பத்தியும் புதிய தொழில் நுட்பமும் வளர்ச்சியடைந்தன. மேலும் பணம் எமது தேசத்தின் உள்ளேயே இருந்தது. படிப்படியாகச் சுயசார்புப் பொருளாதாரம் உறுதியாக வளர்ந்து வருகின்றது.

மறுபுறம் சிங்கள தேசத்தில் நிலைமை மோசமடைந்தது. உற்பத்திப் பொருட்கள் தேங்கின. தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கினார்கள். தமிழீழத்தின் இந்த வளர்ச்சியைக் கண்டு சிறிலங்கா அரசு திகைத்தது. எமது தேசத்தில் வளர்ந்து வரும் சுய சார்புப் பொருளாதாரத்தை அழிப்பதற்காக நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளது.

அதாவது. அத்தியாவசிய மற்ற முடிவுப் பொருள்களைத் தாராளமாக இங்கே அனுப்புகின்றது. ஆனால் மூலப் பொருள்களையோ, எரிபொருளையோ, இன்னும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களையோ இப்படி அனுப்புவதில்லை.

உண்மையில் இன்று எமது தேசத்தினுள் தாராளமாக சிறிலங்கா அரசினால் அனுப்பப்படும் அத்தியவசியமற்ற பொருள்கள், முழுமையான பொருளாதாரத் தடையை விட மிகக் கூடிய தீமையையே விளைவிக்கின்றன.

அதாவது, முழுமையான பொருளாதாரத் தடையின் போது எமது தேச உற்பத்தியும், தொழில் நுட்பமும் வளர்ந்தன. மக்களின் வாழ்க்கை மேம்பட்டு வந்தது. ஆனால் இன்று அத்தியாவசிய மற்ற பொருள்கள் கட்டுப்பாடின்றி அனுப்பப்படுவதால் வளர்ந்து வந்த உள்ளூர் உற்பத்தியும் புதிய தொழில் நுட்பமும் தொழில் வாய்ப்புகளும் சீரழிக்கப்படுகின்றன.

சிங்கள அரசின் இந்த நடவடிக்கையை—இதன் ஆபத்தான தன்மையை - அனைவரும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். உள்ளூர் உற்பத்தியும், இங்கு வளர்ச்சி பெறும் புதிய தொழில் நுட்பமும் மட்டுமே சிறிலங்கா அரசின் அனைத்துப் பொருளாதார அழுத்தங்களையும் முறியடித்துத் தேசத்தை வாழ வைக்கும்.

## திருமலையில் புதிய குடியேற்றங்கள்

இன்று திருமலையில் இராணுவம் தமிழ் மக்களை முகாம்களிலேயே வாழ நிர்ப் பந்தித்துள்ளது. முகாம்களை விட்டுச் சென்று தமது சொந்தக் கிராமங்களில் தம் விருப்பம் போல குடியேறவிடாது தடுக்கப்பட்டுள்ளார்கள்.

அதே சமயம் தமிழ் மக்களின் பாரம்பரிய கிராமங்களில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் முறையே 70%மும் 25%முமாக குடியேற்றப்பட்டு வருகின்றனர். மிகுதி 5% மட்டுமே தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் திருமலை மாவட்ட தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கி, பாதுகாப்பற்றவர்களாக்க சிங்கள அரசு திட்டமிட்டு வருகின்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இராணுவமும் உதவி அரச அதிபர்களும் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இத்திட்டத்தின் ஆபத்தான நிலையை உணர்ந்து குடியேற மறுக்கும் தமிழ் மக்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## படையணி பயிற்சியை முடித்தது

முப்பது வயதிற்கு மேற்பட்ட நாற்பத்தியிரண்டு பேரைக் கொண்ட படையணி புலிகளின் இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டது.

இயக்கத்தின் முழுநேர உறுப்பினர்களான இந்த நாற்பத்தியிரண்டு பேருள் 60 வயதிற்கு மேற்பட்டோர் மூவராவர். இவர்களுள் ஒருவர் 73 வயதுடையவரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கலந்துரையாடல்களும் படக்காட்சியும்

சிறிலங்கா அரசினால் எமது தேசத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பொருளாதார அழுத்தங்களினாலும் கட்டுப்பாடின்றி இங்கே அனுப்பப்படும் அத்தியாவசியமற்ற பொருள்களினாலும் எமது (4ஆம் பக்கம் பார்க்க)



## வாழ்ந்தால் தேசம் முழுமையும் வாழ்வோம்

அண்மையில் கொழும்பில் வசிக்கும் தமிழர்கள் தமது குடும்பத்தவர்களுக்கென பால்மா மற்றும் உணவுப் பொருள்களை பொதிகளாக அனுப்பியிருந்தார்கள். இவ்வாறு 5000 குடும்பங்களிற்கு பொதிகள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டிருந்தன.

இந்தப் பொதிகளை இங்கே அனுப்பி வைத்தவர் திரு. வினோதன் என்பவராவர். நீண்ட நெடுங்காலமாக இவர் தமிழினத்தின் நலன்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருபவராவர். இவர் இங்கு வாழ்ந்த காலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடி வருடியாக இருந்தார். பேரினவாதிகளின் நலன்களைப் பேணினார்.

இன்று இவர் எங்கள் தேசத்தில் எதிரி கொடூரமான இராணுவ நடவடிக்கைகளையும் பொருளாதாரத் தடைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ள இன்றைய நாட்களில் ஒட்டு மொத்தமாக தேசம் முழுவதுமே நெருக்கடிக்குள்ளாகியுள்ள போது ஒரு சில குடும்பங்களின் நலன்களைப் பேண துணை போகின்றார்.

மறுபுறும் விடுதலையை வென்றெடுக்க தேசம் இரத்தத்தால் விலை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. தாய்மாரும், குழந்தைகளும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி. ஸி. முகவர் கூட போஷாக்கின்மையால் வாடும் குழந்தைகளின் பரிதாப நிலையை சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் தேசத்தை விட்டு வெளியேறி வாழ்வோர் போர்க்கால நெருக்கடிகளினால் நேரடியாகப் பாதிப்படைவது இல்லை. தப்பித்துக் கொள்கின்றார்கள்.

தமிழீழத்திற்கு வெளியே வாழும்- தேசத்தை நேசிக்கும் தமிழீழ மக்கள் தனியே தமது குடும்ப நலன்களை மட்டும் பேணுவதில் அக்கறையாய் இருக்கக் கூடாது. தேச மக்களின் நலன்களைப் பேண ஒவ்வொரு சிறிய விடயத்திலும் ஒன்றிணைந்துசெயற்பட முன்வர வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

**விழித்தெழுவோம்! செயற்படுவோம்!!**

# சிங்கள பேரினவாதம்: ஒரு பார்வை

இலங்கையில் நடைமுறையில் இருந்துவந்த பௌத்தத்தின் பிரிவான தேரவாதம் இந்தியாவில் இருந்து பின்னர் வந்த மகாயானத்தால் பாதிக்கப்படுவதாக உணர்ந்த தேரவாத பிரிவைச் சேர்ந்த பிக்குகள் இந்தியாவுக்கெதிரான உணர்வலைகளால் உந்தப்பட்டனர். மகாயானம் தமிழ் பௌத்த குருமாராலேயே இத்தீவுக்குள் நுழைக்கப்பட்டதால் அந்த எதிர்ப்புணர்வு தமிழருக்கெதிராக மாறியதென்பதும் வரலாறு தெளிவாகக்காட்டும் பாடமாகும்.

இந்த வகையிலான எதிர்ப்புணர்வு முனைப்பெய்தி வளரச் சரியான தளம் அமைத்துக் கொடுத்தவர் அநகாரிக தர்மபாலா என்னில் அது மிகைப்படக் கூறுவதாகாது.

இலங்கை சிங்களப் பௌத்தர்களுக்கே சொந்தமானதென்றும் ஏனைய இனத்தவர் அனைவருமே இந்நாட்டின் வந்தேறு குடிகள் என்றும் பச்சை இனவாதத்தைப் பரப்பியவரும் அவரே.

மலையகத்தைத் தம் செங்குருதியால் வளம் கொழிக்கச் செய்த தமிழ்ச் சகோதரர்களைத் ''தென்னிந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கீழ்ச்சாதித தமிழர்கள்'' என்று 1902-ம் ஆண்டிலேயே வருணித்தவர் அநகாரிகர் தான். அக்காலத்திலேயே அப்பாவிச் சிங்கள மக்களின் உள்ளங்களில் ''சிங்கத்தின் பரம்பரையினரான சிங்களவரின் நாடு இது'' என்ற குரோத வித்தையை விதைத்ததன் மூலமே சிங்களப் பேரினவாதத்தின் தந்தையாகி விட்டார் அவர்.

1915-ம் ஆண்டில் சிங்கள-முஸ்லிம இனககலவரததைத் தூணடியது மடடுமலல, 'சிங்கள பௌததம்''என்ற சஞ்சிகை மூலம் இரதத ஆறு ஓடவும் காரணமானார். தமமதீப-தர்ம துவீபம் என்ற மஹா வம்சத்துக்குப் புதுமெருகூட்டி அக்காலத்திலேயே இலங்கையை ஒரு தனி பௌத்த-சிங்கள நாடாக்கக் கனவு கண்ட இவர் நாட்டிய அத்திவாரம் இன்று அடுக்கு மாடிகளுடனான பேரினவாதக் கட்டடமாகி விட்டது.

1920களில் இலங்கைத் தேசிய காங்கிரசை நிறுவிய சேர் பொன். அருணாசலம் சிங்களத் தலைவர்களால் தலைமைப் பதவியினின்றும் நீக்கப்பட்ட செயலும் இனவாதத்தின் தொடர்ச்சியேயாகும்.

வாக்குரிமை பெற்று ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் உரிமை கொண்டிருந்த மலையகத் தமிழரின் குடியுரிமை வாக்குரிமைகளை 1948-ம் ஆண்டிலே டி. எஸ். சேனநாயக்கா அரசு பறித்தமை தமிழினத்துக் கெதிராகச் சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டுச் செய்த ஒரு அரசியல் சதியாகும்.

1956-ம் ஆண்டிலே, தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. நாட்டின் தலைமையை எவ்வகையிலேனும் கைப்பற்ற வேண்டும் என்ற பதவி வெறியால் தூண்டப்பட்ட எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா, கொண்டு வந்த இந்தச் சட்டம் இலங்கையில் வாழ்கின்ற இருவேறு தேசிய இனங்களும் ஒருபோதும் ஒற்றையாட்சியின் கீழ் இணைய முடியாது என்ற உண்மைக்கு வலுவூட்டியது. சிங்கள பௌத்த வெறியர்களான காவி உடை தரித்தோருக்குப் புதிய உத்வேகத்தையும் உணர்வையும் ஊட்டியது. 1943-ம் ஆண்டிலே ஜே. ஆர். ஜயவர்தனாவின் மனதிலே கருக்கொண்ட இத்திட்டம் 13 ஆண்டுகளின் பின் நிறைவேற்றப்பட்டது.

இதனால் ஏற்பட்ட விளைவு தான் 1958 இனக் கலவரம். ஒன்றுமறியாத தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார்கள். இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியது. இனப்படுகொலையின் புதிய அத்தியாயம் இந்த மண்ணிலே தொடங்கியது.

1965-ம் ஆண்டு டட்லி செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டபோதும் இனவாதம் பல வேறு வடிவங்களில் கூர்மை பெற்றது. இடதுசாரிகளும் கூட ''தோசை வடை'' பற்றிப் பேசினார்கள். 'ரத்மலானை தமிழருக்கு'' என்று ''ஜனதின'' இனவாத நெருப்புக்கு எண்ணெய் வார்த்தது.

தீவிர இடதுசாரிகள் என்று தம்மை வருணித்த, ஜே வீ பியினர் கூட 1971 ஆண்டு தமிழினம் முழுவதுமே இந்தியக் கைக்கூலிகள் என்ற நச்சுக்குரலெழுப்பிச் சிங்கள இளைஞர்கள் மத்தியிலே சிங்கள இனத்தின் பகைவர்களே தமிழர் என்று பறைசாற்றியது.

ஒரு காலத்தில் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று போராடிய சமசமாஜக்கட்சியின் மூத்த தலைவரான கொல்வின் ஆர் டீ சில்வாவே இந்த இனவாதத்திட்டத்தின் சூத்திரதாரி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனநாயக முறைப்படியான தேர்தலில் தமிழீழ லட்சியத்திற்கு முழு ஆதரவு நல்கிய தமிழ்மக்கள்மீது 1977-ம் ஆண்டில் ''போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்'' என்று வன்முறையில் இறங்கிய ஜே. ஆர். சிங்களப் பேரினவாதத்தின் ஏகப் பிரதிநிதியாக மாறினார். சிங்கள அரசு தமிழ் மக்கள்மீது பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றை மேற்கொண்டு, தமிழினத்தைப் பூண்டோடழிக்கக் கங்கணம் கட்டினார்.

1981-ம் ஆண்டு சிங்களப் பேரினவாத அரசின் அமைச்சர்களான காமினி திசநாயக்காவும், சிறில் மத்தியூவும் முன்னின்று தமிழ் மண்ணின் தனிப்பெரும் சொத்தான யாழ். நூலகத்தை எரியூட்டியதன் மூலம் தமிழரின் எதிர்கால சந்ததியையே அறிவு சூனியராக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதை உணரலாம்.

1983 ஆடித்திங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட பேரினவாதத்திற்கு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பலியான சம்பவம் இலங்கையின் வரலாற்றில் ஒரு கறை படிந்த அத்தியாயமாகும். சிங்களப் பேரினவாதம் புதிய உருக் கொண்டு கோரதாண்டவமாடியதை உலகமே பதற்றத்துடன் கண்ணுற்றது. அரசியல் திட்டத்தின்மூலம் தமிழினத்தின் உரிமைகளை அறவே பறித்தெடுக்கக் கூடிய சட்டங்களை உருவாக்கித் தமிழினத்தின் பிரதிநிதித்துவத்தை அற்றொழித்துத் தனிச் சிங்கள ஆட்சிக்கு வழிகோலிய ஜே. ஆர். நிரந்தரமாகத் தமிழினத்தைத் தன்னாட்சிக்கு இட்டுச் செல்லும் வகையில் செயலாற்றியுள்ளார்.

1983-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்துக் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான அவர் தம் சொத்துக்களை அழித்தொழித்ததன் மூலம் தமிழினப் படுகொலையைச் சிங்கள பேரினவாதம் சிறப்பாகத் திட்டமிட்டுச் செய்து வருவதை உலகம் நன்கு அறியத் தொடங்கிவிட்டது.

இன்றைய நாட்களில், மலையகத்தலைவர் தொண்டமான் அவர்களின் சமரச முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகள் தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதம் எந்தளவுக்குத் தீவிரமாக இயங்குகிறது என்பதைத் தெளிவாக்குகின்றன.

(இதையொத்த கருத்துக்கள் நூலுருவிலும் வெளிவந்துள்ளன. ஆர்)

> இலங்கையில் நடைமுறையில் இருந்து வந்த பௌத்தத்தின் பிரிவான தேரவாதம் இந்தியாவில் இருந்து பின்னர் வந்த மகாயானத்தால் பாதிக்கப்படுவதாக உணர்ந்த தேரவாத பிரிவைச் சேர்ந்த பிக்குகள் இந்தியாவுக்கெதிரான உணர்வலைகளால் உந்தப்பட்டனர். மகாயானம் தமிழ் பௌத்த குருமாராலேயே இத்தீவுக்குள் நுழைக்கப்பட்டதால் அந்த எதிர்ப்புணர்வு தமிழருக்கெதிராக மாறியதென்பதும் வரலாறு தெளிவாகக் காட்டும் பாடமாகும்.

**செல்வா**




ஒருவர்:- என்ன மணியண்ணை கொஞ்ச நாளாய் சிங்கள அரசுக்கெதிராக மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வது தொடர்கின்றது?

மணியண்ணர்:- ஓமோம். படிப்படியாய் தமக்கெதிரான சிங்கள அரசின் அனைத்து ஒடுக்கு முறைகளையும் தகர்த்தெறிய மக்கள் தயாராகி வருகிறார்கள்.

# ஒரு சிறு குடியிருப்பின் நெருக்கடிகள்

இணுவில் கிராமத்தில் இந்தச் சிறு குடியிருப்பு அமைந்திருக்கின்றது. மருதனார் மடம் சந்தியை அண்மித்து அமைந்த இக்குடியிருப்பைப் பிரதான வீதியில் இருந்தே பார்வையிடலாம்.

ஏறத்தாழ பதினைந்து வருட காலத்திற்கு முன் திரு. மாணிக்கம் என்பவர் இங்கு முதன் முதலில் குடியேறினார். இன்று சற்று ஏறக்குறைய 1 ஏககர் விஸ்தீரணமுடைய இக்குடியிருப்பில் பதினான்கு சிறு வீடுகள் அமைந்துள்ளன. இக் குடியிருப்பில் வாழும் அனைத்துக் குடும்பங்களும் கூலித் தொழிலையே சீவனோபாயமாகக் கொண்டுள்ளனர். ஆரம்பக் கல்வியைக் கூட, பெற்றுள்ளோரின் தொகை மிகக் குறைவானதாகும். இன்று இவர்களின் குழந்தைகளும் சீரான கல்வியைப் பெறுவது கிடையாது. ஏதோ பாடசாலைக்குப் போய் வருகின்றார்கள்.

உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதே இவர்களுக்கு பெரும் பிரச்சினையாய் இருந்து வருகின்றது. சில மாதங்களின் முன்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் இந்தக் குடியிருப்பாளர்கள் அனைவருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. குடிநீருக்கும் ஏனைய தேவைகளுக்கும் என மூன்று குழாய்க் கிணறுகள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. சீரான உறைவிட வசதியின்றி — பெரும் இடையூறு எதிர் நோக்கிய இந்த மக்களைப் பொறுத்தவரை வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டமையும், குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டமையும் அடிப்படைத் தேவைகளிலொன்றை முழுமையாகத் தீர்த்து வைத்துள்ளதெனலாம்.

சிறீலங்கா அரசின் பொருளாதார அழுத்தங்களினால் இவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். இவர்கள் சொந்த நிலம் அற்றவர்கள்.

அன்றாடம் உழைத்தே வாழ்ந்து வருபவர்களாவர். எந்தவொரு சேமிப்பும்இவர்களுக்கு கிடையாது. பொருளாதார அழுத்தங்களினால் விவசாய, கைத்தொழில் உட்படஅனைத்துத் தொழில் வாய்ப்புகளும் பாதிப்படைந்ததன் விளைவாகத் தொழில் வாய்ப்பு அற்றுப் போய்விட்டது.

தொழிலிழப்பைதொடர்ந்து பிரச்சினை அரைப்பட்டினியும் போஷாக்கின்மையும் இச்சிறு குடியிருப்பை பாதித்துள்ளதை தெளிவாக அவதானிக்க முடிகின்றது. அனைத்துக் குழந்தைகளும்தொற்றுநோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதை விட இக்குடியிருப்பிற்கு ஒரு மலசல கூடம் கூட கிடையாது சுருக்கமாய் கூறினால், சுகாதார மருத்துவ வசதிகள் மிக மோசமான நிலையிலேயே உள்ளன.

வறுமையும், கல்வியறிவின்மையும் சேர்ந்துஇந்தமக்களை சமுதாயத்தில் இருந்து தனிமைப்படுத்தி விட்டன. பத்திரிகைகளையோ ஏனைய வெளியீடுகளையோ வாசிக்கும் வழக்கும் இவர்களிடம் காணப்படவில்லை. வாழ்க்கை நிலை அவற்றிற்கு இடம் கொடுப்பதுமில்லை. ஆனாலும் இத்தனை நெருக்கடிகளையும், இழப்புக்களையும் எதிர்கொண்டு உறுதியாக இங்கேயே தங்கியிருக்கின்றார்கள்.

இந்தக் குடியிருப்பாளர்கள் இன்று நிவாரணத்தையோ அல்லது அருமையாகக் கிடைக்கும் கூலித்தொழிலையோ நம்பித்தான் வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள். இவர்களின் தங்கி வாழும் நிலை மாற்றப்பட வேண்டும்.

உழைப்பதற்கு ஆயத்தமாய் இருக்கும் தமக்கு இவர்களுக்கு நிலம் சொந்தமாய் இல்லாத நிலையே மிகப் பெரிய இடையூறாக இருப்பதாக அனைத்துக் குடியிருப்பாளர்களும் ஒருமித்த குரலில் கருத்துத் தெரிவித்தார்கள். உண்மையில் உழைப்பதற்கு தயாராய் இம் மண்ணிலே உறுதியாய் கால் பதித்து நிற்போருக்கு நிலம் இல்லாத நிலை வேதனைக்குரியதே. இந்தநிலை மட்டும் மாற்றியமைக்கப் பட்டுவிட்டால் இந்தக் குடியிருப்பாளர்கள் அனைவரினும் நெருக்கடிகள் மிகப்பெருமளவு தீர்க்கப்பட்டு விடும்.

அன்றாடவாழ்வுப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும்பொழுது கூடவே சோகமும், வறுமையும், நோயும் நிறைந்தகுடியிருப்பின் இன்றைய நாட்கள் படிப்படியாய் மறைந்து விடும். நம்பிக்கையுடன் இவர்களும். இவர்களின் குழந்தைகளும் வாழ்வைஎதிர்கொள்வார்கள். இவர்களின் சிந்தனை விரிவடையும் சமுதாயத்தின் அனைத்துப் பிரச்சினைகளையும், தடைகளையும் வெற்றி கொள்ள ஆர்வமுடன் பங்காளராவார்கள்.

**சிவன்**

### உண்மை

"நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக திரண்டு நின்றால் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது."

தலைவர் –வே. பிரபாகரன்


விழிப்பு

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.


## பயிரோடு வளரும் களைகள்!

ஒரு போராட்டம் அல்லது அரசு எதிர் நோக்கும் நெருக்கடிகளுக்கு, அல்லது அழிவுகளுக்குப் பிரதான காரணி வெளிப்படையான எதிரி மட்டுமல்ல, சொந்த இனத்திற்குள்ளேயே இருக்கும் கோடரிக் காம்புகளுமாகும்.

இந்தத் தீவில் தமிழினத்தின் நீண்ட வரலாறும் இதற்கு விதிவிலக்கல்ல. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு இறுதிவரை சவாலாக இருந்தவன் பண்டாரவன்னியன். ஈற்றில் அவன் தோற்கடிக்கப்பட்டது சொந்த இனத்தினுள்ளேயே இருந்த காக்கை வன்னியன் என்பவனின் காட்டிக் கொடுப்பினாலும் துரோகத் தனத்தினாலுமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் தன் வரலாற்றில் காட்டிக் கொடுப்புக்களாலும், துரோகத்தனங்களாலும் நெருக்கடிகளையும் இழப்புகளையும் காலத்திற்குக் காலம் எதிர் நோக்கியே வருகின்றது

அண்மையில் கூட தமது குறுகிய நலன்களைப் பேணுவதற்காகத் தமது இனத்தை, தேசத்தைக் காட்டிக் கொடுத்த நான்கு நபர்கள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட்டார்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்களினதும் போராளிகளினதும் தற்கொடைகளை இவர்கள் அற்ப காசுக்கு விலை கூறி விற்று விட்டார்கள்.

உண்மையில் இவர்கள் பயிரோடு வளரும் களைகளேயாவார்கள். இக்களைகளை அகற்றும் முயற்சி என்பது எதிரிக்கு எதிராக நேரடியாகப் போராடும் முயற்சியை விடவும் கடினமான தொன்றாகும்.

ஆயினும் களைகளை அகற்றாது பயிரை வளர்க்க முடியாது என்பதால் எத்தகைய சிரமங்களின் மத்தியிலும் இக்களைகளை நாம் அகற்றியே ஆக வேண்டும். மக்களின் ஒத்துழைப்பே இவற்றை அகற்றுவதற்குரிய இலகுவான வழியாகும். களைகளை அகற்றி விடுதலைப் பயிரைப் பேணி வளர்ப்பது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்-

# வரலாற்றைத் திருத்துவோம்!

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை அதற்காகப் போராடும் தேசிய இனத்தின் தேசிய உத்வேகத்தைத் தணிப்பதற்கு பொதுவாக எதிரிகள் கையாளும் வழிவகைகளுள்ஒன்று வரலாற்றுத்திரிப்பும் வரலாற்று மோசடியுமாகும்.

ஐரோப்பியர்கள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்த காலத்தில் ஐரோப்பிய மக்களையும், ஐரோப்பிய வரலாற்றையும்வர்ணித்தார்கள். ஆசிய ஆபிரிக்கர்களையும் அவர்களின் வரலாற்றையும் சிறுமைப்படுத்திக் காட்டினார்கள்.

இதன் மூலம் ஒரு ஐரோப்பியரை உயர்வாகக்கருதும் மனப்பாங்கை ஆசிய, ஆபிரிக்க மக்கள் மனத்தில்விதைத்தார்கள். உளவியல் ரீதியில் இந்த மக்களை தாழ்வு மனப்பான்மை கொள்ளச்செய்தார்கள். ஆனாலும் தேசியவிடுதலைப்போராட்டங்களின் முன்னோடிகளில் பலர் இத்தகைய வரலாற்று மோசடிக்கும் உளவியல் தாக்கங்களுக்கும் எதிராக தமது சொந்த மக்களை பண்பாட்டு ரீதியில் விடுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதனால் தேசிய விடுதலைப் போராட்டங்களின் முன்னோடி நடவடிக்கைகளுள் ஒன்றாக பண்பாட்டு மறுமலர்ச்சி, அல்லது பண்பாட்டுஎழுச்சிகள் இக் கண்டத்தேசங்களில் இடம் பெறலாயின.

இதனை ஒத்த துயர நிலை ஈழத்தமிழ் மக்களுக்குஎதிராக சிங்களப் பேரினவாதிகளால் உருவாக்கப்பட்டுள்ளது

இப்பேரினவாதிகள் சிங்களப் பௌத்தர்களே மண்ணின் மைந்தர்கள் என்றார்கள். சிங்களஇனத்தை ஆரியர் என்றார்கள். தமிழர்களை அந்நியர்கள் வந்தேறுகுடிகள், கள்ளத்தோணிகள் படையெடுப்பாளர்கள் என்றெல்லாம் சித்திரிக்கின்றார்கள். இத்தகைய முற்றிலும் ஆதாரமற்ற இந்த வரலாற்றுமோசடிகளை அம்பலப்படுத்த வேண்டும். தமிழ் மக்களை அவர்களின் சொந்த வரலாற்றிலும் சொந்த பண்பாட்டுவளர்ச்சிப் போக்கிலும் வைத்து இனங்காண்பது அத்தியாவசியமானது ஆகும்.

இலங்கையின் வரலாறு கி.மு 5ஆம் நூற்றாண்டில் இருந்தே உருவாகியதாய் மகாவம்சம் கூறுகின்றது. விஜயனின் வருகையுடனேயே இலங்கையில் முதல் மனிதனின் இருப்புஆரம்பித்தது என்றும் அதற்கு முன் இத்தீவில் வாழ்ந்தோர்மனிதர்கள் அல்லாத ஒருவகைஇராட்சதத்தன்மை வாய்ந்த உயிர்கள் எனவும்அது வர்ணித்தது.

ஆனால்உண்மை முற்றிலும் மாறானது இதுவரை கண்டறியப்பட்ட ஆதாரங்கள்அனைத்தில் இருந்தும் தொல்பொருள் ஆய்வுகளிலிருந்தும் விஜயன் என்று ஒரு நபர் இங்கு வந்ததற்கு சான்றுகள் கிடைக்கவில்லை. மாறாக குறைந்தது 30 000(முப்பதினாயிரம்) ஆண்டுகளுக்கு முற்பட்டமனித எலும்புக்கூடுகள் தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டறியப்பட்டுள்ளன.

இது விஜயனின் வருகைதான் இந்தத்தீவில் நிகழ்ந்த முதல்மனிதனின்வருகை என்ற மகாவம்சத்தின் கூற்றை முற்று முழுதாக பொய்யென நிரூபித்து விட்டது. இக்கருத்தை தெட்டத் தெளிவாகக் கூறியவர் இலங்கையின் மிகப்பிரபல்யமான சிங்களத் தொல்லியலாளர் திரு. எஸ் யு தெரணியாகல ஆவார்

உண்மை இப்படி இருக்கஏன் சிங்களஅரசும் இனவாதிகளும் பாடவிதானங்களிலும், கலை இலக்கியப் படைப்புக்களிலும், நாட்டுப் பாடல்களிலும், நெருக் கூத்துக்களிலும் விஜயன்வருகை என்ற பொய்யான கதைக்கு முன்னுரிமைகொடுக்கின்றார்கள்?

அது பேரினவாதத்திற்கான ஒரு வரலாற்று தத்துவார்த்தப் பின்னணியைக் கொடுக்கின்றது என்பதால்தான், அதே சமயம் விஜயனின் வருகைக்கு முன் இங்குவாழ்ந்ததாய் கூறப்படும் மேற் கூறப்பட்ட மனித எலும்புக் கூடுகள் தென்னிந்தியாவில் வாழ்ந்த ஆதித் திராவிட மக்கள்கூட்டத்தின்எலும்புக் கூடுகளை ஒத்தன என்பதும் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதை இங்குசுட்டிக் காட்டுதல் பொருத்தமானதாகும்

இ. த.

## எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்வோம்!

"விழிப்பு" பத்திரிகையின் முதலாவது இதழில் சுகாதார மருத்துவ வசதிகள் சீர்குலைக்கப் படல்" எனும் செய்தி வெளி வந்திருந்தது. இதுதமிழீழம் முழுவதற்குமே பொருந்தும் குறிப்பாக போர்க்கால நெருக்கடிகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் தற்காலிக குடிலமைப்புத் திட்டங்கள் ஒன்றிலேனும் திட்டமிட்ட மலசல கூட வசதியோ, சுற்றாடல் பேணல் வசதியோ கிடையாது. இது உண்மை. பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவின் செயற்பாடுகள் புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, முறிப்பு. மணலாறு, ஒட்டிசுட்டான் போன்ற இடங்களில் அறவே கிடையாது

முள்ளியவளை போன்ற சில அரசினர் வைத்தியசாலைகளில் பிரசவப் பகுதியில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான வசதிகள் ஏது மில்லை. இந்த நிலைகளை மாற்றியமைப்பதற்கு எந்த ஒரு வேலைத் திட்டத்தையும் சிங்கள அரசு மேற்கொள்ளாது. நம் இனத்தையே அழிக்கக் கங்கணம் கட்டியிருக்கும் அரசு இது போன்ற அடிப்படைத் தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்யாது. சுகாதார சீர்கேட்டின் விளைவால் தமிழ்ச் சமுதாயம் நலிவுறு

முல்லை. சிவா

நோய் பலவற்றால் தாக்குண்டு அழிந்து போவதையே சிங்கள அரசு விரும்பி நிற்கின்றது இந்நிலையில் இங்கு இவைபற்றிய விடயங்களைத் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் சுற்றாடலை, சூழலைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் பற்றிய செயற்பாட்டு விளக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றுக் கடமைபுரிய அனைவரும் தயாராதல் வேண்டும்

### மருத்துவம்

சிங்கள இராணுவம் எமது தேசத்தைஆக்கிரமித்து சிதைத்து விட கங்கணம் கட்டி நிற்கின்றது. இராணுவத்தின் பாதம் எமது மண்ணில் பதிவதை சமர் புரிந்து தடுப்பதற்கு எமது படையணிகள் தயாராகிவிட்டார்கள். நடைபெறப் போவது பெரும் சமராக இருக்கும். இதன் போது எமது வீரர்கள் மிக அதிகளவில் காயமடைவர். இதுவரை நடந்த முக்கிய சமர்களான ஆகாய கடல் வெளிச் சமர், மணலாற்றுச் சமர் ஆகியவற்றினை விட மிகக் கூடுதலான எண்ணிக்கையில் எமது வீரர்கள் காயமடைவர். காயமடைந்த போராளிகளை எத்துணை இடர் வந்தாலும் பராமரித்து, அவர்கள் விரைவில் குணமடைய ஊக்குவித்தல் மக்கள் எல்லோரினதும் வரலாற்றுக் கடமையாகும்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் சுகயீனம் அடைந்திருக்கும் வேளையில் குடும்பத்திலுள்ள அனைவரும் அவரைப் போட்டி போட்டுப் பராமரிப்பார்கள். அவர் விரைவில் குணமடைவதற்கு வேண்டிய அனைத்தையும் செய்வார்கள். எந்நேரமும் அவரைப் பற்றியும், அவருக்குச் செய்ய வேண்டிய சிகிச்சையைப் பற்றியும் சிந்திப்பார்கள். அதே போன்று தேசத்தின் புதல்வர்கள் எதிரியுடன் மோதிக் காயமடைந்திருக்கும் வேளையில் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அவர்களைப் பராமரிக்கப் போட்டி போடுதல் வேண்டும். அவர்கள் விரைவில் குணமடைந்து களம் திரும்ப வேண்டிய அனைத்தையும் செய்தல் வேண்டும். நிகழ உள்ள யுத்தத்தில் எதிரி எமது நாளாந்த வாழ்க்கை நடைமுறைகளைக் குழப்புவான். கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுகள், எறிகணைத் தாக்குதல்களை நிகழ்த்துவான். இவற்றிற்கு மத்தியிலும் எமது புதல்வர்களை நாம் பராமரிப்போம் என்னும் உறுதியை மக்கள் எல்லோரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பராமரிப்பு பணிபுரியும் தொண்டர்களாக இப்பொழுதே அனைவரும் தயாராகுதல் வேண்டும்.

---சி. பாலன்

விழிப்பு

# எல்லையில் ஆயுதம் ஏந்திய மக்கள்

- மக்கள் போராட்டத்தின் அத்திவாரங்களாகத் திகழும் எல்லைப் பிரதேசங்கள்
- தொழில் வேறுபாடற்ற நிலையில் அனைத்துக் கரங்களிலும் துப்பாக்கிகள்
- தம்மைத்தாமே நம்பியதால் பீப்பாய்க் குண்டுகள் மத்தியிலும் மண்ணைவிட்டு ஓடிவிடாத வாழ்க்கை
- காலத்தின் தேவைகளுக்கேற்பக் குழந்தைகளுக்கான வழிகாட்டுகள்
- எல்லைக் காவல் புரியும் தந்தையை, கணவனை, பிள்ளையை நம்பி மண்ணில் பதிந்துள்ள குடும்பங்கள்
- விடுதலைப் போராளிகளினின்றும் மக்களை வேறாக்கி பிரித்துக் காணமுடியாத போராட்ட வடிவம்

இவை அனைத்தையும்நிஜங்களாகவே கொண்டுள்ள பகுதிகளாகத் தமிழீழ மண்ணில் மணலாறு மாவட்டமும் முல்லைத்தீவில் நெடுங்கேணிப் பிரதேசமும் திகழுகின்றன. இந்த மக்கள் தங்கள் நிலங்களை மாற்றானிடம் பறிபோக ஒருபோதும் விட்டுவிட மாட்டார்கள். இவர்களின் கரங்கள் ஏன் துப்பாக்கிகளைத்தாங்குகின்றன.

1983க்கு முற்பட்ட காலங்களிலெல்லாம் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் காடைத்தனங்கள் தொடர்ந்தன. மணலாறுமாவட்டத்தில்தென்னைமரவாடி, கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு செம்மலை, அளம்பில் அனைத்துக் கிராமங்களும் பாதிப்படைந்தன. கடற்றொழில், சிறுகடற்றொழில் துண்டிப்புகள் விளைநிலம், ஆக்கிரமிப்பு, கால்நடைகள் கடத்தல் குடியிருப்பு நிலங்கள் பறிப்பு, டொலர் கென்பாம் குடியேற்றங்கள் என்பன தன்னிச்சையாக நிகழ்ந்தன.

இயற்கை வளங்கள் நிறைந்த இப்பகுதியை ஆக்கிரமிப்பதன் மூலம் வடக்குக் கிழக்கைத் துண்டுபோடும் சிங்கள அரசின் முயற்சிகளை எல்லைப்புற மக்கள் உணர்ந்துவிட்டார்கள். அடக்குமுறைகளை இயல்பாக எதிர்த்து வந்த மக்களின் உணர்வுகளை அந்த மாவட்டத்தின் தளபதிகள் சரியான முறையில் நெறிப்படுத்தியுள்ளார்கள் என்றே கூறலாம்.

விடுதலைப்போராட்ட ஆரம்ப காலங்களில்
- போராளிகளைச் சிறகால் மூடியவர்கள்
- நெருக்கடியான நேரங்களில் போராட்ட இதயத்தைக் காத்த மக்கள்
- இலங்கை, இந்தியப் படைகள், சமூக விரோதிகள் அனைவரின் நெருக்கடிகளின் போதும் உறுதி குலையாதிருந்த மக்கள்

போராட்டத் தலைமைத்துவத்தின் சரியான வழிகாட்டியினைப் பெற்றுத் துணைப் படை அணியாக மாறித் துப்பாக்கியையும் தமது உற்பத்தி ஆயுதங்களுடன் இணைத்துக் கொண்டார்கள். எதிரியின் சவால்களை எதிர்கொள்ளத் தயாராகிவிட்ட மக்களில் எழுபதுக்கு மேற்பட்ட வீதத்தினர் நேரடிப் பங்காளர்களாக விடுதலைப் போராட்டத்தோடு இணைந்துள்ளனர்.

ஆனையிறவுச் சண்டையைத் தொடர்ந்து 1991-08-29 இல் மணலாற்றில் பெரியதொரு படையெடுப்பைமேற்கொண்ட சிறிலங்கா அரசு படுதோல்வியைத் தழுவிக்கொண்டமை வரலாற்றுப் பதிவான விடயமாகும், இந்தச் சண்டையின் போது மணலாற்றுக் காடுகளிலும், கிராமங்களிலும்பீப்பாக் குண்டுகளும், ஆட்லறிச் ஷெல்களும் விதைக்கப்பட்டன.

மண்ணில் வேரோடிவிட்ட மக்களைக் குண்டுகளால் விரட்டிவிட முடியவில்லை. மாறாக மாவட்டத் தளபதியிடம் மக்கள் தானியங்கித்துப்பாக்கிகள்தருமாறு கேட்டுநின்றனர். கடற்கரை, காட்டோரங்கள், வயல்வெளிகள் அனைத்தையும் காவல்புரியத்தலைப்பட்டார்கள்.

விடுதலைப்போரில் நேரடிப் பங்குகொள்ளாத மக்கள் நம்பிக்கையிழந்து ஊர்விட்டு ஊர் ஓடும் சமகாலத்தில் மணலாறு மக்கள் மண்ணைவிட்டு அகல திருந்தனர். விடுதலைப் புலிகளினின்றும் வேறுபடா நிலையில் மக்கள் கரங்களிலும் துப்பாக்கிகள் இருந்தமையே காரணமாக வெளிப்படுகின்றது. அந்த மண்ணில் வாழ்வது அல்லாது விடில் அந்த மண்ணுக்கே உரமாகி விடுவதுஎன்பதில் அவர்கள்உறுதியாகிவிட்டனர்

இப்போராட்ட வடிவமானது விடியலைக் கோடிகாட்டுகிறது. வேட்டைத் துப்பாக்கிகளுடன் ஆரம்பித்த துணைப் படை வடிவம் இன்று தானியங்கித் துப்பாக்கிகளுடன் களத்தில் சென்று போராடும் அளவுக்கு வளர்ந்து விட்டது. விடுதலைப்போராட்டத்தைத் தங்களினின்று சிறிதளவேனும் வேறுபடுத்திப் பார்க்காத அந்த மக்கள் வாழும் பகுதிகளில் பாடசாலைகள் குண்டுகளால் உடைக்கப்பட்டன. தேவாலயம், டிஸ்பென்சரிகள் பீப்பாக் குண்டுகளுக்கு இலக்காகின. விளைநிலங்களில் வேட்டுகள் தீர்க்கப்படு கின்றன. மணலாறுச் சண்டையின்போது மட்டும் அளம்பில் அந்தோனியார் ஆலயம், பாடசாலை, டிஸ்பென்சரி இவற்றைச்சூழ நாற்பத்தி ஏழுக்கு மேற்பட்ட பீப்பாக் குண்டுகள் போடப்பட்டு அப்பகுதி நாசமாக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் மக்கள் மனங்களில் தீவிர உணர்வையும், போராடும்உறுதியையும் வலுவடையச் செய்துள்ளன. சொந்தக்காலில் நிற்க முனைந்துள்ள அந்த மக்கள் வாழும்பிரதேசங்களில் மக்கள் போராட்டம் கொழுந்து விட்டெரியத் தொடங்கிவிட்டது.

**நா. அருணாசலம்**

## சகாப்தம் படைத்த ஸ்டாலின்கிராட் என்ற நூலிலிருந்து...

அடுத்த நாள் விடியற்காலையில் 12 பாசிச டாங்கிகள் இந்தத் துணிவு மிகுந்த வீரர்களை நோக்கி வந்தன. இந்தப் 16 சோவியத் போர்வீரர்களிடமோ ஒரு டாங்கி எதிர்ப்பு துப்பாக்கி கூட இருக்கவில்லை. போதாததற்கு, இவர்களில் பலர் காயமடைந்து இருந்தனர். கொமாண்டர் கடுங் காயமடைந்திருந்தார்.

மரணச் சண்டை தொடங்கியது. வீரர்களில் ஒருவன் முன்னால் வந்த டாங்கியின் மீது எறிகுண்டு கட்டை வீசியபடியே பல்சக்கரத்தின் முன் வீழ்ந்தான். டாங்கி தீப்பிடித்து எரிந்தது. இரண்டாவது வீரன். முதலாவது வீரனின் உதாரணத்தை பின் தொடர்ந்தான், இதற்குப் பின் மூன்றாவது, நான்காவது ... வீரர்கள் இதே மாதிரி செயற்பட்டனர். போர்க்களத்தில் நான்கு பாசிச டாங்கிகள் புகைந்து கொண்டிருந்தன. நாஜி படையினரால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு சில டாங்கிகள் பின் திருப்பின. இரண்டு டாங்கிகள் மட்டும் விடாப்பிடியாக முன்னேறின. 16 வீரர்களில் நால்வர் மட்டுமே உயிருடன் இருந்தனர். இவர்கள் பதுங்கு குழியில் மறைந்திருக்கலாம், பள்ளத்தில் ஒழிந்து தப்பித்திருக்கலாம். ஆனால் இப்படிச் செய்தால் இந்த இடம் எதிரியின் கரங்களுக்கு மாறும், வோல்காவிற்கான பாதை திறந்து விடப்படும். மாண்டு கொண்டிருந்த கொமாண்டரை மறைவிடத்தில் படுக்க வைத்து விட்டு வீரர்கள் எறிகுண்டுக் கட்டைகளைத் தூக்கியபடியே ''எங்களைப் பிடிக்க முடியாது'' என்ற கோஷத்துடன் பாசிச டாங்கிகள் மீது பாய்ந்தனர். எதிரி டாங்கிகள் அழிக்கப்பட்டன.

வீரர்கள் காத்து நின்ற இடத்திற்கு உதவிப் பலம் வந்தபோது அங்கே 6 எரிந்து போன பாசிச டாங்கிகளைப் பார்த்தனர். விஞ்சி நின்ற எதிரியின் தாக்குதலைச் சமாளித்த போர்வீரர்கள் மாண்டனர், ஆனால் ஒரு அடிகூட பின்வாங்கவில்லை.



## மேஜர் செங்கதிர்

மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பாளரான மேஜர் செங்கதிரினதும், வீரவேங்கை சிந்துவினதும் ஓராண்டு நினைவு தினம் 25-2-92 அன்று நினைவு கூரப்பட்டது.

## வாசகர் கடிதம்

தங்களது ''விழிப்பு'' பத்திரிகையின் முதலாவது பிரதி கிடைக்கப் பெற்றேன் வாசித்தேன். மகிழ்ந்தேன். ''விழிப்பு'' எப்போதும் விழிப்புடனேயே வீறு நடைபோட்டு நிற்க வேண்டுமென உள்ளன்போடு வேண்டி நிற்கின்றேன். மேலும் என்னால் முடிந்தவரை 'விழிப்பு' இதழ்களை பலருக்கு கிடைக்கும்படி செய்து வருகின்றேன், பேணிப் பாதுகாத்து வருகின்றேன். தொடர்ந்தும் தங்கள் பத்திரிகை இதழ்களை கிரமமாக அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்
அன்புடன்
வே. சிவனடியார்
மாமூலை
தண்ணீரூற்று

## எமது

...கங்களை மக்களுக்கு வழங்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழுகின்ற மக்கள், அது கிராமமாக இருக்கலாம் அல்லது தற்காலிக குடியேற்றத் திட்டமாக இருக்கலாம். ஒருங்கிணைந்து செயற்பட்டு எமது சமூகத்தின் இது போன்ற சிறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செய்யலாம். மனித வளமும், காட்டுத்தடிகள் சிலவும், தென்னை, பனை ஓலைகளையும் கொண்டு சில மணி நேரத்திற்குள்ளேயே தற்காலிக மலசல கூடங்களையோ கழிவுப் பொருட்களை தேக்கும் இடங்களையோ வைத்துக் கொள்ளலாம். எமது அடிப்படைத் தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும். பிறர் கையை எதிர்பார்த்திருக்கும் நிலை மாறவேண்டும்.

## கலந்துரையாடல்

தேசம் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் பற்றிய கலந்துரையாடல்கள் 24-2-92 தொடக்கம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

மேலும் யாழ். மாவட்டத்தில் எமது போராட்டம் சம்பந்தமாகவும் உலக விடுதலைப் போராட்ட நிகழ்வு பற்றியதுமான இலவசப் படக்காட்சிகள் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவால் காண்பிக்கப்பட்டு வருகிறது

## வாழ்ந்தால்

இவ்வகையில் இன்று கொழும்பில் வாழும் தமிழர் சிலர் தனியே தமது குடும்ப நலன்களைப் பேண முற்பட்டமையே வேதனையான நிகழ்வாக உள்ளது. இச் செயற்பாட்டை விடுத்து இவர்கள் அனைவரும்இணைந்து செயற்பட்டு தமிழீழத்தில் போதிய உணவின்றியும் போஷாக்கின்றியும் வாடும் குழந்தைகளுக்காவது பாலுணவுப் பொருள்களை அனுப்பியிருக்கலாம்

அதுதான் இல்லாவிட்டால் குறைந்தது எமது மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தொடர்ச்சியான பொருளாதாரத் தடையின் பாதிப்புக்களையாவது அம்பலப்படுத்தியிருக்கலாம்.

இவற்றையெல்லாம் விடுத்து தனியே தமது குடும்ப நலன்களை மட்டுமே பேணுதல் என்பது எவ்வளவு மோசமானதென்பதை அனைவரும் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும்.

வினோதன் போன்றவர்களை அந்நியப்படுத்த வேண்டும்.

நாமும் எமது குடும்பமும் என்ற குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வரவேண்டும் வாழ்ந்தால் தேசம் முழுமையும் வாழ்வோம் என ஒவ்வொரு தமிழீழ மக்களும் அவர்கள் தமிழீழத்தில் வாழ்ந்தாலும் சரி, தமிழீழத்திற்கு வெளியே வாழ்ந்தாலும் ச-ரி உறுதி கொள்ள வேண்டும்.

## அரசுக்கெதிரான

இவ்வகையில் அண்மையில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சிங்கள அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிய தந்திரோபாயத் தாக்குதல்

தலைவர் வே. பிரபாகரன் வகுத்த புதிய தந்திரோபாயத்தாக்குதல்திட்டத்தினால் தமிழீழமெங்கும் சிங்களப் படையினர்பாரியஇழப்புக்களைச்சந்தித்துவருகின்றனர். இத்தாக்குதல்களினால் சிறிலங்கா அரச படையினர் மத்தியில் அதிர்ச்சியும், குழப்பமும் ஏற்பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் மட்டும் 320 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். ஒரு 50 கலிபர் துப்பாக்கி உட்பட 175 இற்கும் மேற்பட்ட நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவிற்காக மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவால் 26-02-92 அன்று வெளியிடப்பட்டது.